மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர், கழக கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

# மாநில துணைச் செயலாளர் வீரகணேசன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 9 -

மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளருமான வீர கணேசன் (வயது 66) அவர்கள் நேற்று முன் தினம் (07.10.2025) காலை 11.30 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

"வீரகணேசன் அவர்கள் உடல் நலக் குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்ததும் மிகுந்த துயருற்றேன்.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், தொடர்ந்து ஒன்றுபட்ட மதுரை மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளராகவும் பின்னர் மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் திறம்பட பணியாற்றி யவர்.



மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது அழகர்கோவிலில் நடைபெற்ற இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தி என்னுடைய பாராட்டைப் பெற்றார்.

மாவட்டத்தில் இளைஞர் அணி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். கிராமம் கிராமமாகச் சென்று கழக இளைஞர் அணி அமைப்பை உருவாக்க பாடுபட்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டவராகத் திகழ்ந்த வீரகணேசன் அவர்கள் என் மீது தீராப் பற்று கொண்டவர்.

நான் மதுரைக்கு வரும் போதெல்லாம் ஓடோடி வந்து வரவேற்ற காட்சிகள் இன்றும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

கழகத்தின் மீது மிகுந்த பற்றுகொண்டு கழகப் பணியை செவ்வனே செய்துவந்த வீரகணேசன் அவர்கள் உடல் நலம் குன்றி மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

வீரகணேசன் அவர்களை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தாருக்கும், மதுரை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்கோட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

புதுக்கோட்டை, அக். 9–

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் 'உங்களுடன் ஸ்டாலின்'திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு விராலிமலை தாசில்தார் ரமேஷ் தலைமை தாங்கினார். இதில் பொதுமக்கள் வழங்கிய பல்வேறு மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றிய செயலாளர் அ.இளங் குமரன் மற்றும் விராலிமலை சிவா, மெடிக்கல் குமார், என்.வீராச்சாமி, த. ரெங்கராஜ், துரை முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை விராலிமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், வள்ளியம்மை, ஊராட்சி மன்ற செயலாளர் கருப்பையா ஆகியோர் செய்திருந்தனர்.

## வலைதளங்களில் வலம் வருகிறது!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின்,

# கடத்தப்பட்ட 440 சிலைகள் மற்றும் கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை,அக்.9-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (08.10.2025) ஆணையர் அலுவலகத்தில் சிலை மீட்புப் பணிகள் தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கடந்த காலங்களில் தமிழ்நாட்டிலிருந்து கடத்தப்பட்ட சிலைகளை மீட்பது குறித்தும், மீட்கப்பட்ட சிலைகளை சம்மந்தப்பட்ட திருக்கோயில்களிடம் ஒப்படைத்தல் மற்றும் உலோகத் திருமேனிகளை பாதுகாக்க தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிலை திருட்டு தடுப்புப் பிரிவுக்கென சென்னை அசோக்நகரில் புதிய காவல் நிலையத்தை கடந்த பிப்ரவரி 2024 அன்று தொடங்கி வைத்ததோடு, இப்பிரிவுக்கு ஒரு காப்பாளர் (Curator) மற்றும் சட்ட உதவி ஆலோசகர் (legal advisor) பணியிடங்களை உருவாக்கி தந்துள்ளார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 30.09.2025 வரை உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து 239 உலோகச் சிலைகள், 98 கற்சிலைகள், 4 மரகதலிங்கங்கள், ஓவியங்கள் மற்றும் கலைப்பொருட்கள் என மொத்தம் 440 சிலைகள் மற்றும் கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் வெளிநாடுகளிலிருந்து மீட்கப்பட்ட 12 சிலைகளில் 10 சிலைகள் முறைப்படி சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவிற்கென கும்பகோணத்தில் இயங்கி வந்த நீதிமன்றத்தை தொடர்ந்து கூடுதலாக மதுரை மற்றும் சென்னையில் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அமெரிக்கா, லண்டன், சிங்கப்பூர், நெதர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கடத்தப்பட்ட 76 சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் சிங்கப்பூரில் கண்டறியப்பட்ட அனுமன் சிலை உள்ளிட்ட 16 சிலைகளை இதற்கென அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு அலுவலர்களை கொண்ட குழு சிங்கப்பூருக்கு சென்று ஆவணங்களையும் சாட்சிகளையும் முறையாக சமர்ப்பித்து அச்சிலைகளை தமிழகத்திற்கு மீட்டு கொண்டு வர உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், திருப்புகலூர் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன கண்ணப்ப நாயனார் சிலை நெதர்லாந்து நாட்டின் கண்காட்சியில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஏலம் விடப்படயிருந்த நிலையில் கண்டறியப்பட்டு சிலை திருட்டு தடுப்புப் பிரிவினரின் துரித முயற்சியால் ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அச்சிலைகளுக்கான ஆவணங்கள் அனைத்தும் நெதர்லாந்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. இன்னும் ஓரிரு மாதங்களில் அச்சிலை தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. அதேபோல் லண்டன் ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டியில் அல்மோஷன் கண்காட்சியகத்தில் கண்டறியப்பட்ட திருமங்கையாழ்வார் சிலையை மீட்டு கொண்டுவர தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டதை தொடர்ந்து அச்சிலையை திரும்ப ஒப்படைக்க ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிலைகளை பாதுகாப்பாக வைக்க தமிழகத்தில் ஒன்பது இடங்களில் திருமேனி பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கூடுதலாக சென்னையில் சுமார் 1,000 சிலைகளை பாதுகாப்பாக வைத்திடும் வகையில் திருமேனி பாதுகாப்பு மையம் அமைக்கப்பட உள்ளது.

சிலை திருட்டு தடுப்புப் பிரிவால் மெய்நிகர் அருங்காட்சியம் (Virtual museum) என்ற வகையில் வலைதளத்தில் 138 சிலைகள், 360 டிகிரி கோணங்களில் காணும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் 300 சிலைகளை இவ்வகையில் உருவாக்கி வலைதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சிலை திருட்டை தடுக்க சிலைகளில் நுண்ணிய கதிரியக்க மென்பொருளை பதித்துப் பாதுகாக்கின்ற வகையில் சோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, கடந்த காலங்களில் தமிழ்நாட்டிலிருந்து கடத்தப்பட்ட சிலைகள் மற்றும் கலைப் பொருட்களை கண்டறிந்து அவற்றை மீட்கும் பணிகளை துரிதமாக மேற்கொண்டதன் அடிப்படையில் இதுவரை உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து 440 சிலைகள் மற்றும் கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த அரசு பொறுப்பேற்றபின், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் வகையில் ரூ.166 கோடி மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் களவு எச்சரிக்கை மணி வசதியுடன் 1,889 பாதுகாப்பறைகள் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு, அவற்றில் 1,716 பாதுகாப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில்களிலிருந்து கடத்தப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிலைகளை மீட்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும், அதற்கு தேவையான உதவிகளை வழங்கிடவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மாதந்தோறும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டு நம் கலைப் பொக்கிஷங்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையில் துறை அலுவலர்கள் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு அலுவலர்களோடு ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு கூடுதல் காவல்துறை இயக்குநர் திருமதி டி.கல்பனா நாயக், காவல் துறை தலைவர் திருமதி அனிசா உசேன், , காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஆர். சிவக்குமார், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, திருமதி சி. கல்யாணி, இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, திருமதி கி. ரேணுகாதேவி, சு.மோகனசுந்தரம், திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் ஒன்றியம், எழந்தகுட்டை கிராமம், ஈக்காட்டூர் பகுதியில் அமைந்துள்ள ஆர். என் மஹாலில் வீட்டு மனை பட்ட வழங்கும் விழா அமைச்சர் மரு. மதிவேந்தன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ. பிரகாஷ் ஆகியோர் நேற்று 8.10.2025 துவங்கி வைத்தனர். உடன் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் கே. எஸ். மூர்த்தி, நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் திருமதி. துர்காதேவி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விருது!

## அமைச்சர் இரா.இராஜேந்திரனிடம் காண்பித்து வாழ்த்து!

சென்னை, அக்.9-

தமிழ்நாட்டில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 19.09.2025 அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் வழங்கப்பட்ட விருதினை சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரனிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையிலிருந்து மீண்டு வருகின்றன.

தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஒவ்வொரு ஆண்டும், தென்னிந்திய அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தேர்வு செய்து, விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. அவ்வாறு 2024-25 அரவைப் பருவத்தில், தமிழ்நாட்டில் இயங்கி வரும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தென்னிந்திய அளவில் விருதுகள் பெற்று சாதனை படைத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ.எண். சர்க்கரை ஆலை விருது விவரம் பரிசு விவரம்

1. கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - தொழில்நுட்ப செயல்பாடு - முதல் பரிசு (பிளாட்டினம் விருது)

2. கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - கரும்பு அபிவிருத்தி - இரண்டாம் பரிசு (தங்க விருது)

3. கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - கரும்பு அபிவிருத்தி - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

4. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவள்ளூர் மாவட்டம் - தொழில்நுட்ப செயல்பாடு - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

19.09.2025 அன்று அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கான விருது மற்றும் சான்றுகள் வழங்கப்பட்டது. விருதுகள் பெற்ற சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் விருது மற்றும் சான்றுகளை சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரனிடம் 08.10.2025 நேற்று காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வி.தட்சிணாமூர்த்தி, மற்றும் சர்க்கரைத்துறை இயக்குநர், டி. அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி

அக்டோபர் 9 (1992)



திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ. வீராசாமி

அக்டோபர் 9 (2020)



தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

நாகை நகர வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.